Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# பம்மல் சம்பந்தனாரின் நாடகமேடை நினைவுகள் வழி நாடகக் கூறுகள்

முனைவர் அ.இராஜலட்சுமி
உதவிப்பேராசிரியர், கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் – 641029
harivardhini1108@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

நாடோடியாக வாழ்ந்த மனிதன் உணவிற்காக ஓரிடம் விட்டு வேறொரு இடத்திற்கு இடம்பெயர்ந்தான். மனிதன் தான் தேடி அலைகின்ற உணவுப்பொருள்களைத் தானே விளைவிக்க முடியும் என்பதைக் கண்டறிந்து ஆற்றங்கரை ஓரங்களில் நிலையாக தங்கினான். உணவுத்தொழிலை முதன்மையாகக் கொண்டு பல தொழில்களைப் பெருக்கிக் கொண்டான். காலை முதல் இரவு வரை தொழிலுக்கு முக்கியம் தந்தவர்களுக்குக் களைப்பாறவும் இளைப்பாறவும் பொழுதுபோக்கு என்ற ஒரு அம்சம் தேவைப்பட்டது. முத்தமிழாகவுள்ள இயல், இசை, நாடகம் என்ற மூன்றில் இசையும் நாடகமும் பொழுதுபோக்கிற்காக அமைந்துள்ளன. இயலும் இசையும் தோன்றியதற்குப் பல காரணங்களும் காலகட்டங்களும் குறிப்பிடப்படுகின்ற நிலையில் நாடகம் என்ற ஒன்று எப்பொழுது தோன்றி வளர்ந்தது என்று அருதியிட்டு யாராலும் கூற முடிவதில்லை. செய்யும் வேலைகளுக்கு இடையில் பொழுதுபோக்காக தொடங்கிய இசையும் நாடகமும் காலப்போக்கில் தொழில்முறை அமைப்புகளாக மாறியுள்ளன. இக்கட்டுரையானது பொழுதுபோக்கிற்காக தொடங்கிய நாடகத்தினைத் தொழிற்முறை நாடகமாக மாற்ற பல செயல்திட்டங்களைக் கொண்டு வந்தவரான நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனார் எழுதிய நாடக மேடை நினைவுகள் என்ற நூலில் கூறிய செய்திகளை ஆய்ந்து பார்ப்பதாக அமைகின்றது.

**தரவுச்சொற்கள்**

ஆடுகளம், தள உலாக்கள் , தளக்கோலங்கள் , தளப்படிமங்கள் , தளச்செயல்கள் , தெருக்கூத்து,புஷ்பவல்லி,சுகுண விலாச சபை

**முன்னுரை**

நாடு + அகம் = நாடகம். நாட்டின் அகத்தில் நடக்கும் செய்திகளை நடித்துக் காட்டுவதாக நாடகம் அமைந்துள்ளது. நாடகத்தினைப் போலச்செய்தல் என்றும் கூறுவர். தமிழின் மிகவும் பழமையான இலக்கண நூலான தொல்காப்பியம் மற்றும் பதினெண் மேற்கணக்கு நூல்களான சங்க இலக்கியங்கள் போன்றவற்றிலும் நாடகம் பற்றிய குறிப்புகள் உள்ளன. பொழுதுபோக்கிற்காக தொடங்கப்பட்ட நாடகமானது பரிதிமாற் கலைஞர், சங்கரதாஸ சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் போன்ற மாபெரும் கலைஞர்களால் தொழில்முறை நாடகமாக மாறியது. பம்மல் சம்பந்ததனார் எழுதிய நாடக மேடை அனுபவங்கள் என்ற நூலில் அமைந்த செய்திகள் அன்றைய காலகட்டத்தில் நாடகம் நடத்துவதில் ஏற்பட்ட சிக்கல்களை விரிவாக நம் கண் முன் காட்டும் கண்ணாடியாக விளங்குகின்றது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

**பம்மல் சம்பந்தனார்**

'தமிழ் நாடகத் தந்தை' என்றும், 'நாடகப் பேராசிரியர்' என்றும், 'தமிழ் மேடை நாடகத்தின் சேக்சுபியர்' என்றும் பாராட்டப்பட்டவர் பம்மல் சம்பந்த முதலியார்.

நாடகக் கலையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட பம்மல் சம்பந்த முதலியார் 9.2.1873இல் சென்னையில் பிறந்தார். மாநிலக் கல்லூரியிலும் பின்னர்ச் சட்டக் கல்லூரியிலும் படித்து பி.ஏ., பி.எல். பட்டங்கள் பெற்றார். சில காலம் வழக்கறிஞராகவும், நீதியரசராகவும் பணியாற்றினார். 24.9.1967இல் மறைந்தார்.

நாடக மேடை நினைவுகள்' என்னும் நூலில் பம்மல் சம்பந்தனார் தனது நாடக மேடை அனுபவங்களை எடுத்துக் காட்டுகிறார். நாடகக் கலையை முன்னெடுத்துச் சொல்லும் வகையில் தனக்கு நாடக ஆர்வம் ஏற்பட்டதிலிருந்து தன்னுடைய 94 நாடகங்களையும் மேடை ஏற்றுகின்ற போது ஏற்பட்ட அனுபவங்களை இந்நூலில் விளக்கியுள்ளார். நாடகத்தின் அமைப்பு இவ்வாறு தான் இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்து பல மாற்றங்களைக் கொண்டு வந்தவர் பம்மல் சம்பந்தனார்.

**தொல்காப்பியத்தில் நாடகம்**

தமிழ் இலக்கண நூல்களில் மிகப்பழைமையானதும் நமக்குக் கிடைத்துள்ளதுமான தொல்காப்பியத்தில் நாடகம் என்ற சொல் நாடகத்தின் மரபு சான்ற பொருண்மையில் பேசப்படுகின்றது.

**நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்**
**பாடல் சான்ற புலனெறி வழக்கம் (தொல்காப்பியம். அகத்திணை. 53)**

நாடக வழக்கு என்பது புனைந்துரை வகையைச் சார்ந்தது. இது பல சுவைகளை எல்லாம் சேர்த்துக் கற்பனை கலந்து தரும் முறையாகும். அன்றொய காலக்கட்டத்தில் நாடக வடிவங்களைக் கூத்து, ஆடல் (ஆட்டம்) என்ற இருவகைகளில் குறிப்பிட்டுள்ளனர்.

> **"நாடகத்தின் தொன்மை, குறித்து வைக்கப் பெறாத பழமையுடையது"" என்பர் ஆய்வாளர். தமிழ்மொழியானது எப்போது பிறந்தது, எவ்வாறு வளர்ந்து செழித்தது என்பதை முழுமையாக அறியமுடியாதது போலவே முத்தமிழில் ஒன்றான நாடக கலையும் அந்த அளவினதே என்பர். ஆய்வாளர்களின் இக்கருத்துக்கள் தமிழ்நாடகம் மிகத் தொன்மையான மரபினைக் கொண்டது என்பதனைப் புலப்படுத்துகின்றது. (மு.இராமசுவாமி, தமிழ் நாடகம், நேற்று இன்று நாளை, (1998), ப. 10, 2. இராமர் இளங்கோ, 'அணிந்துரை', கு.பகவதி (பதி. ஆ), தமிழ் மேடை நாடக வரலாறு, (2001), piii)**

**நாடகக்கூறுகள்**

**1)ஆடுகளம், (2)கருவும் கதையும், (3)பாடல், (4)உரையாடல்,**
**(5)இசை (6)திரை, (7)காட்சியமைப்பு (Set), (8)உடை,**
**(9)ஒப்பனை, (10)ஒளி, (11) ஒலி, (12)நடிகர் (கதைமாந்தர்),**
**(13)நடிப்பு, (14)உத்திகள், (15)சுவைகள், (16)பார்வையாளர் பங்களிப்பு**

எனும் பதினாறும் ஒரு நாடக நிகழ்வில் இருப்பனவாகக் கருதலாம். இவற்றோடு தள உலாக்கள் (Stage

Movements), தளக்கோலங்கள் (Stage Compositions), தளப்படிமங்கள் (Stage Images), தளச்செயல்கள் (Stage Business) எனப் பிறகூறுகளையும் சிலர் கூறுவர்" (தே, கணேசன், பள்ளிசாராக் கல்விமையத்தின் வீதிநாடகங்கள் – திறனாய்வு எம்.ஃபில், பட்ட ஆய்வேடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், (2000), L.70)

**1.ஆடுகளம்**

நாடகம் என்பது தெருக்கூத்து என்று அழைக்கப்பட்டகாலம் அது. கிராமங்களிலிருந்த மக்கள் மட்டும் அதனைக் கண்டுகளித்த நிலையினை மாற்றி நல்ல மேடை அமைத்து, பலவகை நாடகங்களை நடத்தித் தமிழ் நாடகத்தை மேம்படுத்தியவர் பம்மல் சம்பந்தனார்.

**2.கருவும் கதையும்**

நாடகத்தின் கதையும் கருவும் நாடகத்திற்கு உயிர்நாடியாகத் திகழ்வன. நாடகத்தின் மையக்கரு சரியாக இருந்து அதனை நகர்த்தும் வழிமுறை தெரியாத போது நாடகம் அதன் பாதையை விட்டு விலகி பார்வையாளர்களும் சலிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துவிடும். அவ்வாறு அமையும் ஒரு சில நாடகங்கள் பார்வையாளர்களை ஏளனத்திற்கும் உள்ளாகும் என்பதைப் பம்மல் சம்பந்தனார் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

> **இந்நாடகத்தில் நான் கண்ட ஓர் ஆபாசம் மாத்திரம் என் மனத்தை வருத்தியது; ராஜகுமாரனுடைய முதன் மனைவி, தன் சோர நாயகனாக ஒரு குஷ்டரோகியிடம் சென்றதாக ஒரு காட்சி நடிக்கப்பட்டது. இது எனக்கு மிகவும் வெறுப்பைத் தந்தது. என்னதான் கெட்டவாளயிருந்த போதிலும் ஓர் அழகிய ராஜகுமாரி குஷ்டரோகியிடம் அணுகமாட்டாள் என்று தீர்மானித்தவனாய், நான் எழுதும்பொழுது இதை மாற்றிவிட வேண்டுமென்று தீர்மானித்தேன். எனக்கு அருவருப்பைத் தந்த போதிலும் அங்கு நாடகம் பார்க்க வந்த ஜனங்கள் இக்காட்சியைக் கண்டு சந்தோஷப் பட்டனர் என்றே நான் உரைக்க வேண்டும். இவ்விஷயத்தைப் பற்றி அன்றிரவு என் தந்தையுடன் நான் கலந்து பேசியபொழுது, நான் எண்ணியது தான் சரியென்று அவரும் ஆமோதித்தார். அன்றிரவு நாடகம் முடிந்து நாங்கள் வீட்டிற்குப் போவதற்கு சுமார் இரண்டரை மணியாச்சுது! ( பம்மல் சம்பந்தனார், நாடக மேடை நினைவுகள், ப.36)**

**3.பாடல்**

அக்கால நாடகங்களில் உரையாடலை விட பாடல்களே முக்கியத்துவம் பெற்று இருந்துள்ளன. நாடக நடிகர்கள் அனைவரும் பாடல் பாடுவதை விரும்பினர்.

> **தாங்கள் பாடப் பாட்டுகள் வேண்டுமென்று நாடகப் பாத்திரங்கள் கேட்டபொழுது எனக்குப் பெருங் கவலை யுண்டாயிற்று. எனக்கும் பாட்டிற்கும் அக்காலம் கன்யா குமரிக்கும் இமய மலைக்குமுள்ள தூரம்தான் இருந்தது. (இப்பொழுதும் அந்த தூரம் அதிகமாகக் குறுகவில்லை யென்றே எண்ணுகிறேன்). ( பம்மல் சம்பந்தனார், நாடக மேடை நினைவுகள், ப.39)**

அக்காலத்தில் நாடகங்களுக்கேற்ற பாட்டுகள் கட்ட வல்லமை வாய்ந்தவராக விளங்கியவர் தாயுமானசுவாமி முதலியார். பம்மல் சம்பந்தனார் தனது தந்தையாரின் உதவியுடன் அவரை வரவழைத்து புஷ்பவல்லியின் கதையை அவருக்குச் சொல்லி அதற்கு ஏற்ற பாட்டுகளைக் கட்டிக் கொடு

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

க்கும்படி கேட்டார். அவரும் அதற்கு இசைந்தார்.

**சுகுண விலாச சபையின் நிர்வாக சபையார் ஒவ்வொரு நாடகத்திற்கும் பாட்டுகள் கட்ட அவருக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுப்பதாகத் தீர்மானித்தார்கள்.[பம்மல் சம்பந்தனார், நாடக மேடை நினைவுகள், ப.39]**

மேற்கூறிய கருத்துகளில் இருந்து பாடல்கள், நாடகத்திற்குப் பெரும் வலு சேர்த்த பாங்கினை நாம் அறிகிறோம்.

**4.உரையாடல்**

பம்மல் சம்பந்த முதலியார் ஆங்கில நாடகங்களின் அமைப்பைப் பின்பற்றி உரைநடையில் நாடகங்களைப் படைத்தார்.

**நாடகப் பாத்திரங்களெல்லாம் பகிர்ந்து கொடுக்கப்பட்ட பிறகு, அவரவர்கள் தங்கள் தங்கள் பாகங்களை எழுதிக் கொண்டு விரைவில் படிக்க ஆரம்பித்தார்கள். ஒரு வாரத்திற்கெல்லாம் ஒத்திகை ஆரம்பித்துவிட்டோம். தற்காலத்தில் நாடகங்களெல்லாம் அச்சிடப்பட்டு, ஒவ்வொருவனுக்கும் ஒரு புஸ்தகம் கொடுக்கப்பட்ட போதிலும் நாடக தினம் வரையில் பாடம் படிக்காதவர்கள் வெகு பெயர்கள் இருக்கின்றனர். அக் காலத்திலோ பென்சிலினால் எழுதப்பட்ட ஒரு காபியை வைத்துக்கொண்டு அத்தனை பெயரும் அவரவர் பாகங்களை அவரவர்களாக எழுதிக்கொண்டு, குருட்டுப் பாடம் செய்து ஒரு வாரத்திற்கெல்லாம் ஒத்திகை ஆரம்பித்து விட்டோம். [பம்மல் சம்பந்தனார் நாடக மேடை நினைவுகள், ப.45]**

**5. இசை**

நாடகத்தில் இசை என்பது மிகவும் முக்கியமானதாகக் கருதப்பட்டு வந்த காலத்தில் இசை என்ற ஒரு இரைச்சல் இல்லாமல் சொல்ல வந்த கருத்தை வெகு இலாவகமாக மக்கள் மனதில் புரிய வைக்கலாம் என்ற கொள்கையினை உடையவராக பம்மல் சம்பந்தனார் விளங்கியுள்ளார்.

**பின்பாட்டை விட்டுவிட வேண்டுமென்று அவர்களும் ஒப்புக்கொள்ளும் படி செய்தேன். பின்பாட்டென்பது பழைய காலத்து வழக்கமாயினும் தற்காலத்திய நாகரிகத்திற்கு அது பொருந்திய தல்லவென்று அவர்கள் ஒப்புக்கொண்டார்கள். ஆயினும் நாடகமாடும் பொழுது பக்க வாத்தியத்துடன், தாளமும் இருக்க வேண்டியது அதி அவசியம் என்று அவர்கள் கூறினார்கள். ( நாடக மேடை நினைவுகள், பம்மல் சம்பந்தனார், ப.எண்.21)**

இசைக் கருவிகள் இல்லாமல் நாடகம் நடிக்க யாரும் ஒப்புக்கொள்ளாத சூழ்நிலையில் ஒரு நாள் மாலையில் ஒத்திகை முடிந்தவுடன் தாளக் கருவிகளில் ஒன்றை வீட்டிற்கு எடுத்துச் சென்று விட்டார். அடுத்தநாள் கருவிகள் இல்லாமல் ஒத்திகை பார்க்கப்பட்டது. இசை இல்லாமலும் நாடகம் நடிக்கலாம் என்ற தனது கொள்கையை அனைவர் முன்பும் நிரூபித்துக் காட்டினார் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாற்றங்கள் வர வேண்டுமெனில் முதலில் அதன் தன்மையைப் புரிய வைக்க வேண்டும். அவ்வாறு புரியாதவர்களுக்கு செயல்முறை விளக்கம் சிறந்தது என்பதை பம்மல் சம்பந்தனார் செய்து காட்டியுள்ளார்.

பம்மல் சம்பந்தனார் ‘ருக்மாங்கதா’ என்ற நாடகத்தை உரையாடல்களும் பாடல்களும் இன்றித் தோற்றக்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

காட்சிகளின் மூலம் (Tableau vivantes) அமைத்து முதன்முதலில் தமிழில் நாடகத்தை நடத்தினார். இது மௌனக்காட்சி என்ற நாடக வகையைச் சார்ந்தது.

**6. திரை**

நாடக அரங்கேற்றம் சிறப்பாக அமைய, அரங்க வடிவமைப்பும் திரைச்சீலை ஒப்பனையும் காட்சிக்குரிய பொருள்களும் பெருந்துணையாக அமைகின்றன. இவற்றின் ஏற்றமுறு பங்கினையும் நடிகர்கள் பேச வேண்டிய, நடிக்க வேண்டிய முறையினையும் சிறப்பான நிலையில் விளக்கியுள்ளார். திரை இழுக்க வேண்டிய முறையினைக்கூட விளக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

> **ஒரு காட்சியின் கடைசியில் இவர் பாடவேண்டியிருந்தது. பாடுவதற்காக உடனே ஆரம்பிக்க வேண்டுமென்று எவ்வளவோ சொல்லியும், அன்று அதைக் கவனியாது, பக்கவாத்தியக்காரர்களைப் பார்த்து தலையை அசைக்க ஆரம்பித்தார். அதன் பேரில் திரையை இழுக்க வேண்டி நியமிக்கப்பட்டவர்; திரையை இழுக்கச் சொல்லுகிறார் என எண்ணி, திரையை இழுத்து விட்டார்; அதன் மீது அவருக்கு அடங்காக் கோபம் வந்து திரைக்குப் பின்னிருந்தே தான் பாடவேண்டிய பாட்டைப் பாடி முடித்தார்! (நாடக மேடை நினைவுகள், பம்மல் சம்பந்தனார், ப.எண்.42)**

**7.உடை**

> **பஞ்சண்ணா' விதூஷகனாக வரும் பொழுதெல்லாம் பூணும் ஆடையானது ஆங்கிலேய கிளொன் (Clown) அல்லது பப்பூன் (Buffoon) உடையேயாகும்! சராயும் சொக்காயும் அப்படியேயிருக்கும். பல வர்ணங்களுடையதாய இந்த உடுப்பிற்கு இவர் பரிகாசமாய் சோபா (Sofa) டிரஸ் என்று பெயர் வைத்தார். அதாவது சோபா முதலிய நாற்காலிகளுக்குப் போடும்படியான உடுப்பு என்று அர்த்தமாகும்.( நாடக மேடை நினைவுகள், பம்மல் சம்பந்தனார், ப.எண்.34)**

அக்காலத்தில் இராமாயணக் கதை, பாரதக்கதை என எந்த நாடகாமாயிருந்தாலும் பாத்திரங்களுக்கேற்றபடி உடைகள் அணியச் செய்த வழக்கம் இருந்துள்ளது. வேடிக்கை தரும் ஆடைகளையும் கதைக்கு ஒவ்வாத ஆடைகளையும் தனது நாடகத்தில் ஒரு போதும் பம்மல் சம்பந்தனார் அனுமதிக்கவில்லை என்பதையும் காண முடிகின்றது.

**8. ஒப்பனை**

> **ராஜாவேடம் தரித்த ஒருவர் (அவர் இன்னும் ஜீவந்தராயிருப்பதால் அவர் பெயரை வெளியிட எனக்கு இஷ்டமில்லை) நாடக ஆரம்பத்திற்குச் சில நிமிஷங்களுக்கு முன்தான் தன் வீட்டிலேயே வேஷம் போட்டுக் கொண்டு ஜட்கா வண்டியில் ஏறிக்கொண்டு வந்து சேர்ந்தார்! அவர் முகத்திற் பூசிய வர்ணமானது வியர்வையினால் ஒழுக ஆரம்பித்து மிகவும் ஆபாசமாயிருந்ததென நாங்கள் எல்லாம் நகைத்தோம் ( நாடக மேடை நினைவுகள், பம்மல் சம்பந்தனார், ப.எண்.42)**

பம்மல் சம்பந்தனாரின் குழுவில் இருந்தவர்கள் முகத்தில் வர்ணம் தீட்ட அக்காலத்தில் பெயர்போன நடராகிய சுப்பராயாச்சாரி என்பவரின் கம்பெனியில் வேஷம் தீட்டும் அப்பு என்பவர் முதல் ஒன்பது வருஷ காலம்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

ஒரு நாடகம் தவறாது சுகுன விலாச சபைக்கு ஊழியனாய், மிகந்த சுருசுருப்புடன் உழைத்த வேலையாளாக இருந்துள்ளார்.

முகத்தில் தேவைக்கு அதிகமாக பூசப்படும் வர்ணங்களையும் வெறுத்துள்ளார் என்பதும் கதாபாத்திரத்தின் தன்மையை மனதில் நிறுத்திக் கொண்டு தான் வர்ணம் பூச வேண்டும் எனும் எண்ணம் கொண்டவராக பம்மல் சம்பந்தனார் விளங்கியுள்ளார்.

**9. நடிகர் (கதைமாந்தர்)**

நாடக நடிகர்களைக் கூத்தாடிகள் என்று அழைக்கப்பட்ட வழக்கத்தை மாற்றி, அவர்களைக் கலைஞர்கள் என்று சிறப்பாகக் குறிப்பிடும் நிலைக்கு உயர்த்தினார்.

> **பம்மல் சம்பந்த முதலியார், நாடகத்திற்கு ஆற்றிய தொண்டு தமிழர்கள் என்றும் நினைவில் வைக்கத் தக்கது. கற்றவர்களும் நல்ல குடும்பத்தைச் சார்ந்தவர்களும் தமிழ் நாடகத்தைப் பார்க்க மாட்டார்கள் என்ற கருத்து பம்மல் சம்பந்த முதலியார் நாடகங்களால் மாற்றம் பெற்றது. உயர் குடியில் பிறந்தவர்களையும் புகழ் பெற்ற அரசியல்வாதி களையும், அறிஞர்களையும் பம்மல் சம்பந்த முதலியார் தம்முடைய நாடகங்களில் நடிக்கச் செய்தார். அவர்களில் குறிப்பிடத் தக்கவர்கள் (நாடக மேடை நினைவுகள், பம்மல் சம்பந்தனார், அணிந்துரை)**

**10. உத்திகள்**

சிறுத்தொண்டர்’ நாடகத்தில் சித்திரபுத்திரனாகவும் ‘காலவ ரிஷி’ என்ற நாடகத்தில் நாரதராகவும் சிறிய வேடங்களில் நடித்த இவர் பெண் வேடம் புனைந்தும் நடித்துள்ளார்.

நாடகத்தில் பெரிய பாத்திரங்களில் மட்டுமன்றி சிறிய பாத்திரங்களில் நடித்ததால் புகழ் பெற்றார். நாடகத்தில் தலைவனாக நடித்தவர்கள் மற்றச் சிறிய பாத்திரங்கள் ஏற்று நடிக்க முன்வர மாட்டார்கள் என்ற கருத்தை முறியடித்தார்.

‘இரண்டு நண்பர்கள்’ எனும் நாடகத்தில் சுந்தராதித்யனுக்கு இறுதியில் பைத்தியம் பிடித்துவிடுகிறது. அப்பாத்திரத்தை ஏற்று நடிக்க பம்மல் சம்பந்தனார், மன நோயாளிகளின் செயல்களை இரு திங்கள் மருத்துவமனையில் இருந்து நுணுகி அறிந்த பின்பு அவ்வேடத்தில் நடித்தார்.

> **சேக்சுபியரின் ‘ஹேம்லட்’ நாடகத்தில் நடிப்பதற்கு முன்னர் அந் நாடகத்தில் ஆங்கிலத்தில் நடித்த எட்மண்ட் கீன், எட்வின் பூத், கெம்பிள் ஆகியோர் நடிப்பைக் கூர்ந்து ஆராய்ந்து அதன் பின்னரே அப்பாத்திரத்தில் நடித்தார். (நாடக மேடை நினைவுகள், பம்மல் சம்பந்தனார், அணித்துரை)**

**சுவைகள்**

அக்காலத்திய நாடகங்கள் யாவும் இன்பியலில் முடிவுடையன. சம்பந்த முதலியார் அந்நிலையை மாற்றி ஆங்கில நாடகங்கள் அமைப்பைப் போன்று, இன்பியலும் துன்பியலும் கலந்து வரும் நாடகங்களைப் படைத்தார். தமிழ் நாடக மேடையில் செய்த பெரிய புரட்சி இதுவாகும்.

நாடகங்களை எழுதுகின்ற ஆசிரியர்கள் அவர்கள் படைத்துள்ள நாடக மாந்தர்களின் உள்ளுணர்வுப் போராட்டங்களை விவரிக்க வேண்டும். அவ்வாறு விவரிக்கும்போது அந்நாடகங்களைப் பார்க்கின்ற மாந்தர்களுடைய மனங்களும் தூய்மை பெறும் என்று நாடக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். பம்மல் சம்பந்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

த முதலியார் இயற்றிய ‘மனோகரா’, ‘இரு நண்பர்கள்’ முதலியவை இவ்வகையைச் சார்ந்தவை.

**பார்வையாளர் பங்களிப்பு**

வயது முதிர்ந்த கலைஞர்கள் சிறு வயதுடையகதாநாயகனாக நடிப்பைப் பார்வையாளர்கள் வெறுத்தனர் என்பதை,

> **என்னுடைய ஐம்பத்தொன்பதாம் வயதில் சுமார் பதினேழு பதினெட்டு வயதுடைய இளம்பிராயம் பொருந்திய நாடகப் பாத்திரங்களையே இன்னும் நடிக்க வேண்டுமென்று, அந்தரங்கமாய் இச்சைப்படுகிறேன்! நாடகமேடைகளின் கெடுதிகளுள் இது ஒரு முக்கியமானதென் பதற்கு ஐயமென்ன? இதன்பொருட்டே நமது பூர்வீகர்கள் நாடக மேடையைப் பெரும்பாலும் வெறுத்தனர் போலும். (நாடக மேடை நினைவுகள், பம்மல் சம்பந்தனார், ப.எண்.46)**

அந் நாட்களில் தமிழ் நாடகங்கள் விடிய விடிய நடக்கும். அந் நிலையை மாற்றித் தமிழ் மேடை நாடகங்களை மூன்று மணி நேரத்திற்குள் முடிக்க வேண்டும் என்று காலத்தைச் சுருக்கிய பெருமையையும் அதனால் வெகுவாக நாடகம் பார்ப்பவர்களின் எண்ணிக்கையையும் பெருக்கிய பெருமை பம்மல் சம்பந்தனாரைத் தான் சேரும்.

**முடிவுரை**

பழங்காலத்து முன் நடந்த கதைகளை அப்படியே கூறுவதும் அதனை அப்படியே நடிப்பதும் மட்டுமே நாடகமாகாது. இலங்கையில் அவருடைய நாடகங்களைப் பார்த்த சுலையரசு சொர்ணலிங்கம் என்பவர், பிற்காலத்தில் ஈழத்துத் தமிழ் நாடக வளர்ச்சிக்குப் பாடுபட்டார். அவர் பம்மல் சம்பந்த முதலியாரைத் தன்னுடைய ஆசான் என்று குறிப்பிட்டுள்ளார். தமிழ் நாடகங்களை முதலில் வெறுத்தவர் பிற்காலத்தில் தமிழ் நாடக உலகின் உச்சம் தொட்டவராக விளங்கியுள்ளார். முதலில் தாயார் கூறும் கதைகளையும், தந்தையாரிடமிருந்து பெற்ற நூல்களின் மூலமும் நாடகமாக அறிவை வளர்த்துக் கொண்ட போதிலும் தான் பார்த்து ரசித்த தெலுங்கு நாடகத்தையும் ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களையும் மனதில்கொண்டு தமிழிலும் அதேபோல் நாடகங்கள் இருக்க வேண்டும் என்ற ஆதங்கத்தின் விளைவாக தமிழ் நாடகங்களின் மீது ஈர்ப்புக் கொண்டார். குடும்பத்தாரின் அனுமதியும் சமூகத்தாரின் பெரும் மதிப்பையும் பெற்று தெருவில் நடத்தும் கலையாக இருந்த நாடகத்தினைத் தொழில்முறை நாடகமாக மாற்றிய பெருமை சம்பந்தனார் அவர்களையே சாரும்.

**துணை நூற்பட்டியல்**

1.அறிஞர் ச. வே. சுப்பிரமணியன்,தொல்காப்பியம், நச்சினார்க்கினியர் (எழுத்து சொல்- பொருள்), அறிஞர் ச.வே.சு. அவர்களின் 81-ஆம் அகவை பிறந்தநாள் வெளியீடு, மெய்யப்பன் பதிப்பகம் 53,4 சென்னை-608001,

2.மு.இராமசுவாமி, தமிழ் நாடகம், நேற்று இன்று நாளை, (1998), தமிழ் நாடகம் — நேற்றும் இன்றும் பதிப்பாசிரியர் முனைவர் கு. பகவதி,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES தரமணி, சென்னை - 600 113, ஆண்டு :2000

3.தே, கணேசன், பள்ளிசாராக் கல்விமையத்தின் வீதிநாடகங்கள் – திறனாய்வு எம்.ஃபில், பட்ட ஆய் வேடு,

மதுரை காமராசர் பல்கலைக்கழகம், (2000),

4.**ராவ் பகதூர்** பம்மல் சம்பந்த முதலியார், நாடக மேடை நினைவுகள்,உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் NTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES சி.ஐ.டி. வளாகம், தரமணி, சென்னை 600 113, ஆண்டு:1998